செ.வெ. எண்: 305

நாள்: 4-07-17

**இணைப்பு**

மாவட்ட சமூகநல அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

## பத்திரிக்கை செய்தி

மாவட்ட சமூக நலத்துறையின் வாயிலாக விதவை, கணவரால் கைவிடப்பட்டோர், ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர்களுக்கு மின் மோட்டார் பொருத்தப்பட்ட இலவச தையல் இயந்திரம் வழங்குவதற்கு தகுதி வாய்ந்த பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

**விண்ணபத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றுகள்-**

1. வருமானச் சான்று ரூ.72,000/-க்குள் (வட்டாட்சியரிடம் பெற வேண்டும்)
2. இருப்பிடச்சான்று (வட்டாட்சியரிடம் பெற வேண்டும் அல்லது ரேஷன் கார்டு)
3. தையல் பயிற்சி சான்று (பதிவு செய்யப்பட்ட தையல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது) (6 மாத கால பயிற்சி)
4. வயது சான்று (20 முதல் 40 வயது வரை) அல்லது கல்விச் சான்று அல்லது பிறப்புச் சான்று.
5. சாதிச் சான்று.
6. கடவுச் சீட்டு (Passport Size Photo) அளவு மனுதாரரின் கலர் புகைப்படம் - 2.
7. விதவை, கணவரால் கைவிடப்பட்டவர், ஆதரவற்ற மகளிர் மற்றும் மாற்றுத்திறனாளி பெண் ஆகியவற்றிற்கான சான்றிதழ்களின் நகல்.
8. ஆதார் அடையாள அட்டை.

மேற்காணும் ஆவணங்களுடன் விண்ணப்பங்களை காஞ்சிபுரம் மாவட்டம் சமூகநல அலுவலகத்தில் 15.07.2017க்குள் சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்,
காஞ்சிபுரம்.

**விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய முகவரி-**

மாவட்ட சமூகநல அலுவலகம்,
எண்-43 காந்தி நகர், 2வது தெரு,
IOB வங்கி அருகில்,
கலெக்டர் ஆபிஸ் அருகில்,
காஞ்சிபுரம் 631 502